THE HINDU - ENGLISH Dated: 09.02.2025

# DMK romps home in Erode (East) bypoll

The Hindu Bureau
ERODE

The ruling DMK won the byelection in the Erode (East) Assembly constituency in Tamil Nadu with a massive lead on Saturday.

Its candidate, V.C. Chandhirakumar, won by a margin of over 90,000 votes, in the constituency where 1,54,890 votes were counted in all.

His closest rival was the Naam Tamilar Katchi's M.K. Seethalakshmi who secured 15.59% of the votes. A total of 6,109 votes went to NOTA.

The counting went off without any major incident.

The bypoll, which was held on February 5, was necessitated after the death of Congress MLA E.V.K.S. Elangovan in December 2024, who himself won the seat in the byelection held in February 2023.



V.C. Chandhirakumar

Chief Minister M.K. Stalin said the victory was people's recognition for the welfare measures and progressive schemes of the DMK government.

THE HINDU - ENGLISH

Dated: 09.02.2025

# DMK wins Erode (East) bypoll by a margin of 91,558 votes

**The party's candidate secured a lead right from the first round, and polled 1,15,709 votes at the end of the final round; NTK's candidate came second, securing 24,151 votes; 6,109 voted for NOTA**

The Hindu Bureau
ERODE

The DMK's candidate, V.C. Chandhirakumar, registered a landslide victory by a margin of 91,558 votes in the byelection to the Erode (East) Assembly constituency.

At the end of the 20th round of counting at the Government College of Engineering, Chithode, the votes bagged by Mr. Chandhirakumar stood at 1,15,709. The NTK's candidate, M.K. Seethalakshmi, came second, securing 24,151 votes. A total of 46 candidates contested in the byelection. All rivals of the DMK candidate forfeited their deposit. The DMK secured 74.7% of the votes counted (1,54,890), and the NTK, 15.5%. A total of 6,109 persons (3.9%) cast their vote for NOTA, which finished third. The AIADMK and the BJP had boycotted the bypoll.




**Landslide win:** DMK candidate V.C. Chandhirakumar receiving the certificate of election after his victory on Saturday. M. GOVARTHAN

Mr. Chandhirakumar secured the lead right from the first round and widened the margin in all subsequent rounds. "This is not just a win in the Erode (East) constituency, but proof of the fact that we [the DMK] will be successful in the 2026 Assembly election as well," he told mediapersons later.

He thanked Chief Minister M.K. Stalin, Deputy Chief Minister Udhayanidhi Stalin, and Minister S. Muthusamy, among others, for the victory.

Postal ballots were counted first at 8 a.m. Votes polled in electronic voting machines were counted from 8.30 a.m. in the presence of District Election Officer and Collector Raja Gopal Sunkara, General Observer Ajay Kumar Gupta, and Returning Officer and Corporation Commissioner H.S. Srikanth. The result of the first round was declared around 10.15 a.m., and that of the last round (20) around 7 p.m. Votes were counted at 14 tables by 51 counting officials under the supervision of a micro-observer. Three control units developed snags, and the symbols recorded in voter-verifiable paper audit trials were counted and declared in rounds 18-20.

**Postal ballots were counted at first at 8 a.m. Votes polled in EVMs were counted from 8.30 a.m.**

Ms. Seethalakshmi told mediapersons that the result was not a setback to the party as it had secured more votes this time than in the previous byelection to the constituency. "The DMK won owing to electoral malpractice, and will definitely face a setback in the 2026 Assembly election," she said. She further said NTK chief coordinator Seeman's criticism of Periyar did not reduce the party's votes, but rather helped it gain support among the people.

THE HINDU - ENGLISH
Dated: 09. 02. 2025

# Left candidates poll fewer votes than NOTA in Delhi

The Left parties, which came together to contest six seats in the Delhi Assembly election, polled fewer votes than NOTA in all the constituencies, failing to make any dent. The Communist Party of India (Marxist) had fielded candidates from Karawal Nagar and Badarpur, the Communist Party of India was in the fray from Vikaspuri and Palam, and the Communist Party of India (Marxist-Leninist) Liberation contested the Narela and Kondli seats. In the six seats, the Left parties together polled 2,158 votes, while NOTA got 5,627 votes. PTI

DECCAN CHRONICLE
Dated: 09.02.2025

# Landslide victory for DMK in Erode East

DC CORRESPONDENT
CHENNAI, FEB. 8

Putting new energy into the DMK alliance in the state ahead of next year's Assembly election, the ruling party won the byelection to the Erode East Assembly constituency with a thumping margin of 91,558 votes, improving on the figure of 66,233 votes with which Congress candidate E.V.K.S. Elangovan was elected in the 2023 byelection. While DMK candidate V.C. Chandrakumar got 1,15,709 votes, his nearest rival Naam Tamilar Katchi candidate M.K. Seethalakshmi secured 24,151 votes. NOTA received 6,109 votes.

The byelection was necessitated by the demise of Elangovan, a senior Congress leader, in December last year. The DMK had taken over the seat from its ally and put its candidate. The AIADMK and the BJP had boycotted the byelection.



DMK candidate VC Chandirakumar addresses the media outside a counting center during the counting of votes for the Erode East Assembly by-election, in Erode district, Tamil Nadu, Saturday.

DMK president and Chief Minister M.K. Stalin said his party registered a huge victory on Periyar's soil in Erode. He said that the overwhelming victory in the election was a certificate for the DMK's governments' good governance and a recognition for the benefits brought about by the welfare schemes it had launched.

THE NEW INDIAN EXPRESS
Dated: 09.02.2025

POLLS 74.7%

# DMK records thumping win in Erode East by-election

P SRINIVASAN @Erode

THE ruling DMK continued its electoral winning streak by emerging victorious in the Erode East by-election on Saturday by getting 1,15,709 votes, which was 74.7% of the total votes polled. DMK's V C Chandhirakumar trounced Naam Tamilar Katchi's M K Seethalakshmi by a margin of 91,558 votes. The NTK candidate, who had polled 24,151 votes, forfeited her deposit.


DMK's V C Chandhirakumar

Since all the major political parties including the AIADMK, BJP, PMK and the DMDK had boycotted the bypoll, the by-election was seen as a direct contest between DMK's Dravidian politics and NTK's Tamil nationalist outreach.

A total of 46 candidates, including 44 Independents, were in the fray. NOTA (None Of The Above) grabbed third place with 6,109 votes.

Speaking to reporters after the counting, Chandhirakumar dedicated the victory to Chief Minister M K Stalin. "People have reposed faith in the DMK, the CM and deputy CM (Udhayanidhi Stalin)," he said.

TIMES OF INDIA.
Dated: 09.02.2025

# DMK wins Erode East by 91,558 votes; result not a defeat: NTK

## Seethalakshmi Loses Deposit By 1.6k Votes Despite AIADMK, BJP Boycott


TIMES NEWS NETWORK

**Erode:** DMK candidate V C Chandhirakumar won the Erode East byelection in Tamil Nadu, defeating his principal opponent M K Seethalakshmi from Naam Tamizhar Katchi by a margin of 91,558 votes.

Chandhirakumar polled 1,15,709 votes, accounting for

▶ **'AIADMK voters would have skipped voting', P 8**

74% of the total votes, while Seethalakshmi received 24,151 votes, or 15.5% of the votes cast. She was 1,600 votes short of securing one-sixth of the total votes polled, which was required to secure the deposit. Nevertheless, this is one of the highest vote shares achieved by NTK in its electoral history. In the 2023 bypoll in Erode East, NTK had secured only 10,827 votes (6.2%).




Interestingly, 6,109 voters opted for NOTA, one of the highest numbers in a Tamil Nadu assembly election, likely due to the boycott by AIADMK and BJP. The bypoll was necessitated by the death of Congress leader E V K S Elangovan.

For DMK, the Erode East bypoll tally is also higher than any other byelection held in recent years.

"The bypoll victory is a referendum of Dravdian model govt's good governance," said chief minister M K Stalin. "We will not only deliver the promises made to people of Erode East, but will fulfil aspirations of entire western TN," he said in a statement. Assured of a victory, neither Stalin nor deputy chief minister Udhayanidhi Stalin campaigned for the bypoll. Chandhirakumar said, "The bypoll result is a clear indication of people's mood ahead of the 2026 assembly election."

Seethalakshmi told reporters that the result was not a defeat, but a victory for NTK as the party has more than doubled its tally compared to 2023 bypoll in the same constituency.

▶ **Demand for change, P 8**

# 'Rise in NTK votes signals demand for change'

▶ **From P1**

Seethalakshmi said, "The additional votes that NTK got were a sign that people want alternatives."

Disregarding NTK's strong performance, Chand-



hirakumar said the party's higher vote share was accidental. "They are going to face bigger defeats in future," he said. Asked whether NTK's failure to secure deposit was due to the party chief Seeman's harsh attack on social reformer Periyar E V Ramasamy, a native of Erode, Seethalakshmi said that was not the case. "The poll result has proved that Erode is the land of stalwarts like Nammazhvar, Dheeran Chinnamalai, Kalingarayan and Tirupur Kumaran," she said in a rebuttal to DMK's slogan that Erode was 'Periyar Mann' (Land of Periyar).

TIMES OF INDIA Dated: 09.02.2025

# DMK sails through in Erode East, NTK doubles vote share

## Some AIADMK Voters Would Have Skipped Voting: Analysts

**V Mayilvaganan & Senthil Kumaran** | TNN

AM Shudhagar






**WIN WIN SITUATION FOR DMK, NTK:** Election officials oversee vote counting and secure ballot storage as results unfold in the Erode East bypoll. Meanwhile, a jubilant DMK member distributes sweets, celebrating VC Chandhirakumar's victory by a margin much higher than E V K S Elangavon's in the 2023 bypoll

**Erode:** The bypoll for Erode East assembly segment has turned out to be a win-win election for both DMK as well as its principal opponent in the fray NTK.

If DMK has increased its vote share and widened the victory margin considerably, the NTK has polled its highest tally in an election in Tamil Nadu. The Tamil nationalist party has achieved a 15.5 % vote share, close to double its average vote share in the state. Though NTK had failed to secure a deposit by a narrow margin, the party's rank and file are jubilant that they managed to poll more than 24,000 votes. "Though we never had the money and muscle power of DMK, we have given them a sense of fear," said NTK candidate M K Seethalakshmi.

The DMK on the other hand secured 74 % of the votes polled, which has turned out to be the highest the DMK front had achieved in bypolls since 2021. DMK's VC Chandhirakumar polled about 5,000 votes more than the votes bagged by E V K S Elangovan in 2023.

But the key question that the results have raised is about AIADMK votes. The opposition party had polled about 43,000 votes in the bypoll held for the segment in 2023. Where would these votes have gone? As the poll date neared, several voters decided to vote on caste lines. The DMK candidate was a mudaliar and the NTK candidate a gounder. Both communities live in large numbers in the segment and a section of them from AIADMK and BJP decided to back the candidate from their respective castes.

Political analysts point out that a section of AIADMK voters would have stayed away from exercising their franchise due to the boycott decision. This could be the reason for the dip in voter turnout compared to 2023. In the last election, 1.7 lakh voters turned out to vote while now only 1.5 lakh came to the polling booths. Their votes could have been split between NTK, Nota and DMK as well.

Nota saw a rise from 798 in 2023 to 6100 now. The NTK's vote share spike was also attributed to AIADMK and BJP votes.

Analysts say that Seeman had upset AIADMK cadres too by his harsh criticism of Periyar E V Ramasamy, and they could have chosen to vote for DMK.

### VOTE SHARE OVER YEARS

| | DMK | AIADMK | BJP+ | NTK | NOTA | VICTORY MARGIN |
|---|---|---|---|---|---|---|
| Erode East 2025 | 1,15,709 | Boycott | Boycott | 24,151 (15.5%) | 6,109 | 91,558 |
| Erode East 2023 | Congress - 1,10,156 (64.5%) | 43,923 (25.7%) | AIADMK alliance | 10,827 (6.35%) | 798 | 66,233 |
| Erode East 2021 | Congress - 67,300 (44.2%) | TMC (AIADMK alliance) 58,396 (38.4%) | Aiadmk alliance | 11,629 (7.65%) | 1,546 | 8,904 |

DT NEXT
Dated: 09.02.2025

# DMK's Chandhirakumar wins Erode East; 45 lose deposit

**COIMBATORE: The Dravida Munnetra Kazhagam's VC Chandhirakumar romped home a decisive win with a margin of 91,558 votes in the Erode East bypolls.**



Chandhirakumar receives the election certificate on Saturday

Chandhirakumar secured 1,15,709 votes while his archrival Naam Tamilar Katchi (NTK) candidate Seethalakshmi got 24,151 votes.

Even though this victory was on expected lines for the DMK, with opposition parties, including the AIADMK and BJP, boycotting the bypolls citing irregularities, such a huge vote margin came as a surprise.

Since the first round of counting, Chandhirakumar maintained a steady lead, with his vote margin growing. From a significant lead of 6,756 votes in the first round, the margin grew consistently to reach 91,558 votes in the final 20th round. Significantly, NOTA polled 6,109 votes to secure the third spot. Of the total 46 candidates, including several independents who were testing the electoral waters, all except Chandhirakumar lost their deposits.

In the 2021 assembly polls, Congress candidate Thirumagan Everaa had won the Erode (E) seat by 8,904 votes against Tamil Maanila Congress candidate Yuvaraja, who contested on the AIADMK's two leaves symbol.

Following his death due to a heart attack, his father and Congress leader EVKS Elangovan won the bypolls in 2023, with 66,233 votes against AIADMK's KS Thennarasu. Subsequently, EVKS Elangovan's death on December 14 last year necessitated this bypoll.

More on P5

# DMK's Chandhirakumar wins hands down by 90,000 votes

**COIMBATORE: DMK's VC Chandhirakumar romped home with a decisive victory, winning by a margin of 91,558 votes in the Erode East bypolls.**

VC Chandhirakumar secured 1,15,709 votes, while his nearest rival, Naam Tamilar Katchi (NTK) candidate Seethalakshmi, secured only 24,151 votes.

Even though this victory was on expected lines, with opposition parties, including AIADMK and BJP, boycotting the bypolls and blaming the ruling government for manipulating successive polls, such a huge vote margin was a surprise.

From the first round of counting, Chandhirakumar maintained a steady lead, with his vote margin growing after every round of counting. From a significant lead of 6,756 votes in the first round, the vote margin grew consistently to reach 91,558 votes in the final 20th round. Significantly, NOTA polled 6,109 votes to secure the third spot.

Out of the total 46 candidates, including several independents who tested the electoral waters in the bypolls, all others except VC Chandhirakumar lost their deposits.

In the 2021 Assembly polls, Congress candidate Thirumagan Everaa won by a margin of 8,904 votes against Tamil Maanila Congress (TMC) candidate Yuvaraja, who contested on the AIADMK's Two Leaves symbol. Following his death due to a heart attack, his father and Congress leader EVKS Elangovan won the bypolls in 2023 with a margin of 66,233 votes against AIADMK's KS Thennarasu. The death of EVKS Elangovan necessitated this bypoll.



DMK supporters celebrating VC Chandirakumar's landslide victory in Erode East bypoll on Saturday

DT NEXT

Dated: 09.02.2025

# Model code lifted in Erode (E) constituency

COIMBATORE: The Model Code of Conduct (MCC), which was in effect in Erode East assembly constituency, was lifted with the end of counting on Saturday. Over last few weeks, the flying squad and static teams of election dept carried out checks across the constituency and seized those carrying above Rs 50,000 without valid documents. Of total Rs 54.13 lakh seized from those carrying without documents, Rs 41.85 lakh has been returned upon furnishing documents and the remaining Rs 12.27 lakh has been deposited in the treasury. With the end of counting process, the temporary check posts established and guarded by armed cops in areas like Sampath Nagar, Ellai Mariamman Kovil and Moolapattarai were removed.

THE HINDU-TAMIL Dated: 09.02.2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் திமுக அமோக வெற்றி

## நாதக உட்பட 45 வேட்பாளர்கள் டெபாசிட் இழந்தனர்

■ ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 91 ஆயிரத்து 558 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட நாதக வேட்பாளர் உட்பட 45 பேரும் டெபாசிட் இழந்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைவைத் தொடர்ந்து, இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தலை அதிமுக, பாஜக, தேமுதிக, தவெக உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்த நிலையில், இண்டியா கூட்டணி சார்பில் திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார், நாம் தமிழர் கட்சியின் சார்பில் மா.கி.சீதாலட்சுமி உள்ளிட்ட 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இடைத்தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 5-ம் தேதி நடந்தது. 67.97% வாக்குகள் பதிவாகின.




• ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு, வெற்றி சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் வழங்கினார் அருகில் ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான ராஜகோபால் சுன்கரா; தேர்தல் பார்வையாளர் அஜய் குமார் குப்தா உட்பட பலர் உள்ளனர்.

| ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் முடிவுகள் | |
|---|---|
| மொத்த வாக்குகள் | 2,27,546 |
| பதிவான வாக்குகள் | 1,54,890 |
| வி.சி.சந்திரகுமார் (திமுக) | 1,15,709 |
| மா.கி.சீதாலட்சுமி (நாதக) | 24,151 |
| நோட்டா | 6,109 - (3.94%) |
| (91,558 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வெற்றி) | |

**வாக்கு எண்ணிக்கை**

இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் நேற்று காலை தொடங்கியது. மொத்தம் பதிவான 251 தபால் வாக்குகளில், திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் 197 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி 13 வாக்குகளும், பதிவு செய்யப்பட்ட மற்றும் சுயேச்சை வேட்பாளர்களுக்கு 15 வாக்குகளும், நோட்டாவுக்கு 8 வாக்குகளும் பதிவாகி இருந்தன. 18 வாக்குகள் செல்லாதவை என அறிவிக்கப்பட்டது

அதனை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 17 சுற்றுகளாக எண்ணப்பட்டன. முதல் சுற்றில் தொடங்கி அனைத்து சுற்றுகளிலும் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் தொடர்ந்து முன்னிலை பெற்று வந்தார்.

17 சுற்றுகள் நிறைவடைந்த நிலையில், திமுக வேட்பாளர் 90 ஆயிரத்து 535 வாக்குகள் முன்னிலை பெற்று இருந்தார். இதனை தொடர்ந்து, பழுதான 3 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள், விவிபேட் இயந்திர பதிவுகளின் அடிப்படையில் எண்ணப்பட்டன. வாக்கு எண்ணிக்கை முடிவில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். நாதக வேட்பாளர் சீதாலட்சுமி உட்பட போட்டியிட்ட 45 வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.

**ஈரோடு ஃபார்முலாவுக்கு வெற்றி**

தேர்தலில் வெற்றி பெற்ற வி.சி.சந்திரகுமார், 'மக்களை நேரடியாக சந்தித்து, வாக்கு சேகரித்து வெற்றி பெற வேண்டும் என்ற ஈரோடு ஃபார்முலா வென்றுள்ளதாக' தெரிவித்தார்.

'கடந்த தேர்தலை காட்டிலும் இரு மடங்கு வாக்குகளைப் பெற்ற நிலையில், ஈரோடு பிரபாகரன் மண் என நிரூபிக்கப்பட்டுள்ளது' என நாதக வேட்பாளர் சீதாலட்சுமி தெரிவித்தார்.

**முதல்வர் பெருமிதம்**

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் திமுக கூட்டணி வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், 1.15 லட்சத்துக்கும் மேலான வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். இந்த மகத்தான வெற்றியை வழங்கிய ஈரோடு கிழக்கு வாக்காளர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

திமுகவுக்கும், கூட்டணி கட்சிகளுக்கும், இந்த ஆட்சிக்கும், நாம் செயல்படுத்திவரும் உன்னத திட்டங்களுக்கும் மக்கள் அளித்துள்ள மாபெரும் அங்கீகாரம் தான் இந்த வெற்றி. தேர்தலுக்கு முன்பே வெற்றி யாருக்கு என்பதை உணர்ந்துவிட்ட எதிர்க்கட்சிகள், களத்துக்கே வராமல் ஓடிய காட்சியையும் முன்கூட்டியே தமிழகம் பார்த்துவிட்டது.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை உறுப்பினர் சந்திரகுமார், தொகுதி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் முன்மாதிரி சட்டப்பேரவை உறுப்பினராக செயல்படுவார். எங்களது நன்றியின் அடையாளமாக எப்போதும் மக்களுக்கு உண்மையாக இருப்போம். மேற்கு மண்டல மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி காட்டுவோம் என்று உறுதி அளிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

DAILY THANTHI.
Dated: 09.02.2025

## சட்டசபை இடைத்தேர்தல் முடிவு அறிவிப்பு

# ஈரோடு கிழக்கில் தி.மு.க. அமோக வெற்றி

### வி.சி.சந்திரகுமார் (தி.மு.க.) - 1,15,709
### சீதாலட்சுமி (நா.த.க.) - 24,151
### நோட்டா - 6,109

ஈரோடு, பிப்.9-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் அமோக வெற்றி பெற்றார்.

**ஈரோடு கிழக்கு தொகுதி**

தமிழ்நாட்டின் 234 சட்டமன்ற தொகுதிகளில் 98-வது சட்டமன்ற தொகுதியாக இருப்பது ஈரோடு கிழக்கு தொகுதி. இந்த தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடல்நலக்குறைவால் கடந்த ஆண்டு டிசம்பர் 14-ந் தேதி மரணம் அடைந்தார். இதனால் கடந்த 5-ந்தேதி ஈரோடு கிழக்கு தொகுதியில் இடைத் தேர்தல் நடந்தது.

இந்த தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதா லட்சுமி உள்பட 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அ.தி.மு.க. கூட்டணி, பா.ஜனதா கூட்டணி கட்சிகள் இடைத் தேர்தலை புறக்கணித்தன.

**67.97 சதவீத வாக்குப்பதிவு**

தேர்தல் நாளான 5-ந் தேதி 237 வாக்குச்சாவடிகளில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை தேர்தல் நடந்தது.

மொத்தம் 67.97 சதவீதம் ஓட்டுகள் பதிவாகின. தேர்தலில் வாக்காளர்கள் ஓட்டு போட்ட மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் அனைத்தும் 'சீல்' வைக்கப்பட்டு, சித்தோடு அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்தன.

**வாக்கு எண்ணிக்கை**

நேற்று வாக்குஎண்ணிக்கை நடைபெற்றது. காலை 7 மணிக்கு முன்னதாகவே மாவட்ட கலெக்டரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான ராஜகோபால்சுன்கரா, தேர்தல் பொது பார்வையாளர் அஜய்குமார் குப்தா, மாநகராட்சி ஆணையாளரும் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான ஸ்ரீகாந்த் ஆகியோர் வாக்கு எண்ணும் மையத்துக்கு வந்தனர். அங்குள்ள அனைத்து ஏற்பாடுகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.



தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அதிகாரி ஸ்ரீகாந்த் வழங்கியபோது எடுத்த படம்.

சரியாக காலை 8 மணிக்கு தபால் வாக்கு பெட்டிகள் திறக்கப்பட்டு ஓட்டுகள் எண்ணும் பணி தொடங்கப்பட்டது. காலை 8.45 மணி அளவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. 14 மேஜைகளில் வாக்கு எண்ணிக்கை நடந்தது.

**20 சுற்றுகள்**

முதல் சுற்று வாக்கு எண்ணிக்கை காலை 10.15 மணிக்கு வெளியிடப்பட்டது. தி.மு.க. வேட்பாளர் 7 ஆயிரத்து 837 ஓட்டுகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் 1,081 ஓட்டுகளும் பெற்றனர். முதல் சுற்றிலேயே 6 ஆயிரத்து 756 ஓட்டுகள் வித்தியாசத்தில் தி.மு.க. முன்னிலையில் இருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு சுற்றிலும் தி.மு.க. பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையிலேயே இருந்தது.

முதலில் 17 சுற்றுகளாக ஓட்டுகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. பின்னர் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பழுது காரணமாக 20 சுற்றுகளாக மாற்றப்பட்டது.

**தி.மு.க. அமோக வெற்றி**

20-வது சுற்று முடிவில் 91 ஆயிரத்து 558 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் அமோக வெற்றி பெற்றார். அவருக்கு தேர்தல் நடத்தும் அதிகாரி ஸ்ரீகாந்த் வெற்றி சான்றிதழை வழங்கினார். இதைத் தொடர்ந்து தி.மு.க.வினர் வெற்றியை உற்சாகமாக கொண்டாடினார்கள்.

மொத்த வாக்காளர்கள்- 2,27,546

பதிவான வாக்குகள்- 1,54,657

வி.சி.சந்திரகுமார் (தி.மு.க.)- 1,15,709

சீதாலட்சுமி (நாம் தமிழர் கட்சி)-24,151

நோட்டா-6,109

**டெபாசிட் இழப்பு**

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உள்பட 45 வேட்பாளர்களும் 'டெபாசிட்' இழந்தனர். நோட்டா 3-வது இடத்துக்கு வந்தது.

DAILY THANTHI Dated: 09.02.2025

வாக்கு எண்ணும் மையத்தில் போலீசார் தடுத்ததால்

# அதிகாரிகளுடன் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வாக்குவாதம்

ஈரோடு. பிப்.9-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று சித்தோடு அரசு என்ஜினீயரிங் கல்லூரியில் நடைபெற்றது. காலை 8 மணிக்கு மேல் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி வாக்கு எண்ணும் மையத்துக்கு வந்தார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவரை தடுத்தனர். அவர் வேட்பாளர் என்றதும் அவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார். அவருடன் ஆண் ஒருவரும் சென்றார். அவரை போலீசார் தடுத்தனர். அவர் முகவர் என கூறினார். ஆனால் அவரிடம் அடையாள அட்டை இல்லை. எனவே அவரை அனுமதிக்கவில்லை. இதையடுத்து வேட்பாளர் சீதாலட்சுமி தங்களை புறக்கணிப்பதாக அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.



இதுபோல் தி.மு.க. வேட்பாளரின் முகவர் ஒருவரை உள்ளே விடாமல் போலீசார் தடுத்தனர். இதனால் வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வெளியே சென்று அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்தார். இதனால் வாக்கு எண்ணும் மையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

DINAMALAR
Dated: 09.02.2025

# தி.மு.க., வெற்றி

## • ஈரோடு தொகுதியில் எதிர்பார்த்த மாதிரியே...
## • அ.தி.மு.க., ஓட்டு சீமான் கட்சிக்கு வரவில்லை

– நமது நிருபர் –

**எதிர்பார்த்தது போலவே, ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தலில், தி.மு.க., 90,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. கடந்த முறை நடந்த இடைத்தேர்தலில், 43,000 ஓட்டுகள் வரை பெற்ற அ.தி.மு.க., இம்முறை போட்டியிடாமல் ஒதுங்கியதால், அக்கட்சி ஓட்டுகள் தங்களுக்கு கிடைக்கும் என நாம் தமிழர் கட்சி எதிர்பார்த்தது. ஆனால், அந்த ஓட்டுகள் கிடைக்காததால், 24,000 ஓட்டுகள் மட்டுமே அக்கட்சி சார்பில் போட்டியிட்ட சீதாலட்சுமியால் பெற முடிந்தது.**



ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதியில், தி.மு.க., வேட்பாளர் சந்திரகுமார் வெற்றி பெற்றதை அடுத்து, சென்னை அறிவாலயத்தில் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி மகிழ்ச்சியை கொண்டாடிய கட்சி தொண்டர்கள்.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.,வாக இருந்த, தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் இளங்கோவன் இறந்ததை தொடர்ந்து, அங்கு தேர்தல் அறிவிக்கப்பட்டு, கடந்த 5ம் தேதி விறுவிறுப்பாக ஓட்டுப்பதிவு நடந்து முடிந்தது.

தி.மு.க., கூட்டணியில் ஏற்கனவே காங்., சார்பில் போட்டியிட்டு வென்ற இத்தொகுதியை, இம்முறை தி.மு.க., கேட்டு வாங்கி போட்டியிட்டது.

இத்தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ.,வான சந்திரகுமாரை வேட்பாளராக அறிவித்து, தி.மு.க., தேர்தல் பிரசாரம் செய்தது.

### புறக்கணிப்பு

'ஆளும் கட்சியினரின் அதிகார பலமும், பண பலமும் தொகுதிக்குள் வலுவாக இருக்கும் என்பதால், எப்படியும் வெற்றி அவர்களுக்கு தான்; ஜனநாயக முறைப்படி நடக்காத தேர்தலை புறக்கணிக்கிறோம்' என்று சொல்லி, தமிழகத்தின் பிரதான கட்சிகளான அ.தி.மு.க.,வும், பா.ஜ.,வும் ஒதுங்கிக் கொண்டன.

ஆனால், தேர்தல் என்றாலே எப்போதும் துணிச்சலுடன் களத்துக்கு வரும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான், வழக்கம் போல இடைத்தேர்தலில் போட்டி என அறிவித்து, தன் கட்சி வேட்பாளராக முன்னாள் பேராசிரியை சீதாலட்சுமியை களமிறக்கினார்.

### தெரு தெருவாக

'ஈ.வெ.ரா.,வின் மண்ணாக அறியப்பட்டிருக்கும் ஈரோட்டில், அவருக்கான பிம்பத்தை உடைத்து வெற்றி பெறுவேன்' என்ற கோஷத்தோடு சீமான் வேகமாக களமிறங்கினார்.

முன்னதாக, ஈ.வெ.ரா.,வின் கடந்த கால பேச்சுக்களை எடுத்து வைத்து கடும் விமர்சனம் செய்து, தமிழக அரசியலில் பெரும் சலசலப்புகளையும் ஏற்படுத்தினார்.

கூடவே, தேர்தல் பிரசார களத்திலும் ஈ.வெ.ரா., குறித்த கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்தார். அத்துடன், தி.மு.க., அரசின் அவலங்களை தொடர்ச்சியாக பட்டியலிட்டு பேசினார்.

துவக்கத்தில் இருந்தே, 'சீமான் கருத்துக்கு எவ்வித பதிலும் சொல்ல மாட்டோம்' என்று ஒதுங்கிய



சந்திரகுமார்



சீதாலட்சுமி

தி.மு.க., தரப்பு, கடைசி வரை அமைதியாக பிரசாரம் செய்தது.

லோக்கல் அமைச்சர் முத்துசாமியிடம் தேர்தல் பொறுப்பு அளிக்கப்பட்டதுடன், தி.மு.க., தேர்தல் பரபரப்புகளில் இருந்தும் முழுமையாக ஒதுங்கிக் கொண்டது.

அமைச்சர்கள் பட்டாளம், கட்சியின் நிர்வாகிகள், துணை முதல்வர் உதயநிதி, முதல்வர் ஸ்டாலின் என யாரும் பிரசாரத்துக்காக, ஈரோடு கிழக்கு தொகுதி பக்கம் போகவில்லை.

ஆனால், ஈரோடு கிழக்கு தொகுதியிலேயே ஒரு வாரத்துக்கும் மேலாக தங்கியிருந்து, சீதாலட்சுமிக்காக தெரு தெருவாக பிரசாரம் செய்தார் சீமான்.

ஏற்கனவே தன் கட்சி பெற்ற ஓட்டுகளை காட்டிலும் கூடுதல் ஓட்டுகள் வாங்கி விட்டால், அதுவே வெற்றி என்ற லட்சியத்தோடு, அ.தி.மு.க., மற்றும் பா.ஜ., ஓட்டுகளை பெறுவதற்காக காய் நகர்த்தினார். அதற்காக, தி.மு.க.,வை மட்டும் முழு வேகத்தில் விமர்சித்தார்.

அவர் எதிர்பார்த்தது போல, கடந்த இடைத்தேர்தலின் போது கட்சிக்கு கிடைத்த ஓட்டுகளை விட இம்முறை கூடுதல் ஓட்டுகள் நாம் தமிழர் கட்சிக்கு கிடைத்துள்ளன. ஆனாலும், டிபாசிட்டை கூட கட்சி வேட்பாளரால் தக்க வைக்க முடியவில்லை. அதற்கு காரணம், அக்கட்சியினர் பெரிதும் எதிர்பார்த்த அ.தி.மு.க., ஓட்டுகள், நாம் தமிழர் கட்சிக்கு முழுமையாக விழவில்லை.

### எதிர்பார்த்தது இல்லை

இருந்த போதும், 'தற்போது பெற்ற ஓட்டுகளே நாம் தமிழர் கட்சியின் வளர்ச்சிக்கு சான்று' என்று, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி, தோல்விக்கு பின் பேட்டியளித்துள்ளார்.

அவர் கூறியதாவது:

ஓட்டு எண்ணிக்கையின் துவக்கம் முதல், ஒரே அளவாக ஓட்டுப்பதிவு செய்துள்ளனர். உதாரணமாக நான்காவது சுற்றில், 6,014 ஓட்டுகள் பெற்றோம்.

பணத்துக்கு விலை போகாமல், சிந்தித்து மண்ணில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்பது, நா.த.க.,வால் மட்டுமே முடியும் என நம்பி மக்கள் ஓட்டுப்பதிவு செய்துள்ளனர்; எங்களுக்கு இது பின்னடைவு இல்லை.

கடந்த முறை நாங்கள் பெற்ற ஓட்டுகளான 10,827ஐ விட தற்போது குறைவாக பெற்றிருந்தால், பின்னடைவு என்று கூறலாம். மக்களை சிந்திக்க வைத்ததே, சீமானுக்கு கிடைத்த வெற்றியாகும். இது, 2026 பொதுத்தேர்தலில் தி.மு.க.,வுக்கு அச்சத்தை ஏற்படுத்தும்.

பணம் கொடுத்து, மிரட்டல் விடுத்து, கள்ள ஓட்டுகள் போட்டதையும் கடந்து, மக்கள் யாருக்கும் விலை போகாமல் நா.த.க.,வுக்கு ஓட்டுகள் போட்டதே மாற்றத்துக்கான புரட்சி தான். ஈ.வெ.ரா.,வை விமர்சித்ததால், ஓட்டு குறைந்தது என காரணம் கூற இயலாது.

தொடர் தோல்வியை நா.த.க., பெற்றாலும், ஓட்டுகள் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வதை வெற்றியாகவே பார்க்கிறேன்.

கடந்த 2016ல், 2,000 ஓட்டுகள் பெற்றோம். தற்போது, 24,000 ஓட்டுகளுக்கு மேல் பெற்றுள்ளதே வெற்றி. மக்கள் எங்களுக்கு கொடுத்த அங்கீகாரம். அதே நேரம், நாங்கள் எதிர்பார்த்த ஓட்டுகள் எங்களுக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு சீதாலட்சுமி கூறினார்.

### 45 வேட்பாளர்களும் 'டிபாசிட்' இழப்பு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், நா.த.க., மற்றும் சுயேச்சைகள் என அனைவரும் டிபாசிட் இழந்தனர். தேர்தலில், தி.மு.க., – நா.த.க., உட்பட, 46 பேர் போட்டியிட்டனர். மொத்தம், 2.27 லட்சம் வாக்காளர்களில், 1 லட்சத்து 54,657 பேர் ஓட்டுப்பதிவு செய்தனர். ஓட்டு எண்ணிக்கையில் தி.மு.க., வேட்பாளர் சந்திரகுமார் 1,15,709 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். நா.த.க., வேட்பாளர் சீதாலட்சுமி 24,151 ஓட்டுகள் பெற்று இரண்டாமிடம் பெற்றார்.

இவர்களை அடுத்து நோட்டா, 6,109 ஓட்டுகள் பெற்றது. மற்ற வேட்பாளர்கள், 1,000 ஓட்டுகளுக்கு கீழ் பெற்றனர். தேர்தலில் பதிவான ஓட்டுகளில், ஆறில் ஒரு பங்கு ஓட்டுகளை பெறுபவர்கள், டிபாசிட் தொகையை திரும்ப பெற முடியும். இதன்படி, 25,777 ஓட்டுகள் பெற்றால் மட்டுமே டிபாசிட்டை பெற முடியும். அந்த வகையில், தி.மு.க., வேட்பாளர் சந்திரகுமார் தவிர, நா.த.க., வேட்பாளர் உட்பட, 45 வேட்பாளர்களும் டிபாசிட் இழந்தனர்.

### 75 சதவீத வாக்காளர்கள் ஆதரவு

'ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வெற்றி என்பது, அத்தொகுதிக்கு மட்டுமல்ல, 2026 சட்டசபை பொதுத்தேர்தலுக்குமான சான்றாகும்' என முதல்வர், துணை முதல்வர் கூறினர். தொகுதியில், 75 சதவீத மக்கள் தி.மு.க.,வை ஆதரித்து ஓட்டளித்துள்ளனர். தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு என்ன நிலை ஏற்பட்டுள்ளதோ, தி.மு.க.,வுக்கு எவ்வாறான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளதோ, அதே நிலை தான், 2026 சட்டசபை தேர்தலிலும் தமிழகம் முழுதும் எதிரொலிக்கும். மற்ற கட்சிகள் செயல்பாடு பற்றி பேச விரும்பவில்லை.

– சந்திரகுமார்,
தி.மு.க., – எம்.எல்.ஏ.,

DINAKARAN Dated: 09.02.2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் அபார வெற்றி

■ நாம் தமிழர் கட்சிக்கு டெபாசிட் காலி ■ நோட்டாவுக்கு 3வது இடம்

ஈரோடு, பிப். 9: ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவில் திமுக வேட்பாளர் சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். நாம் தமிழர் கட்சி டெபாசிட்டை இழந்தது. நோட்டாவுக்கு 3வது இடம் கிடைத்து உள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் கடந்த டிசம்பர் மாதம் 19ம் தேதி உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார். இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறும் என கடந்த ஜனவரி மாதம் 7ம் தேதி அறிவிக்கப்பட்டது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த ஜனவரி மாதம் 10ம் தேதி முதல் தொடங்கி 17ம் தேதி வரை நடந்தது. இதில், 58 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். இந்த தேர்தலை அதிமுக, பாஜ உள்ளிட்ட முக்கிய கட்சிகள் புறக்கணித்தது. இறுதியாக திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாதக வேட்பாளர் சிதாலட்சுமி மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து திமுக, நாதக மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தீவிர பிரசாரம் மேற்கொண்டனர். இந்த பிரசாரம் கடந்த 3ம் தேதி மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. கடந்த 5ம் தேதி 237 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் 1 லட்சத்து 54 ஆயிரத்து 657 பேர் வாக்களித்தனர். இது 67.97 சதவீதம் ஆகும்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் மின்னணு வாக்குபதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோடு அருகே உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு எடுத்து செல்லப்பட்டு, 'ஸ்ட்ராங் ரூமில்' வைத்து பூட்டி சீல் வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஈரோடு இடைத்தேர்தலுக்கான வாக்குகள் எண்ணும் பணி ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் நேற்று காலை 8 மணிக்கு துவங்கியது. முன்னதாக தபால் வாக்குகள் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு எண்ணப்பட்டது.

தேர்தலில் பதிவான தபால் வாக்குகள் எண்ணுவதற்கு ஒரு மேஜையும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் 14 மேஜைகளிலும் 17 சுற்றுகளாக எண்ணுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பெரியவலசு பகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி எண் 71, திருநகர் காலனி பகுதிக்கு உட்பட்ட வாக்குச்சாவடி எண் 115 மற்றும் நேதாஜி சாலைக்கு உட்பட்ட வாக்குச்சாவடி எண் 220 ஆகிய 3 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கோளாறு ஏற்பட்டது. இதனால், அந்த வாக்குப்பதிவு இயந்திரத்திற்கு உண்டான விவிபேடில் பதிவான வாக்குச்சீட்டுகள் தனித்தனி சுற்றுகளாக எண்ணப்பட்டது. அதாவது 17வது சுற்று முடிந்ததும் 20வது சுற்றுவரை கூடுதலாக 3 சுற்றுகள் எண்ணப்பட்டது. இந்த வாக்கு எண்ணும் பணியில் 51 அலுவலர்கள் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு சுற்று முடிவுகளிலும் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் முன்னிலை வகித்தார். முதல் சுற்று முடிவில் சந்திரகுமார் 6,756 வாக்குகள் வித்தியாசத்திலும், இரண்டாம் சுற்று முடிவில் 13,681 வாக்குகள் வித்தியாசத்திலும், 5ம் சுற்று முடிவில் 29,212 வாக்குகள் வித்தியாசத்திலும், 8ம் சுற்று முடிவில் 43,821 வாக்குகள் வித்தியாசத்திலும், 10ம் சுற்று முடிவில் 50 ஆயிரத்தை கடந்து 54,649 வாக்குகள் வித்தியாசத்திலும், 14வது சுற்று முடிவில் 76,002 வாக்குகள் வித்தியாசத்திலும் முன்னிலையில் இருந்தார். இறுதி சுற்றான 20வது சுற்றின் முடிவின்படி திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 1,15,709 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் வேட்பாளர் சிதாலட்சுமி 24,151 வாக்குகள் பெற்று டெபாசிட் இழந்தார். நோட்டாவுக்கு 6,109 வாக்குகள் பதிவானது. இந்த தேர்தலில் நோட்டாவுக்கு 3வது இடம் கிடைத்து உள்ளது. வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார்க்கு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் ராஜகோபால் சுன்கரா முன்னிலையில் வெற்றி சான்றிதழ் வழங்கப்பட்டது. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் திமுக அபார வெற்றி பெற்றதை தொடர்ந்து, வாக்கு எண்ணும் மையம் முன்பு பட்டாசுகள் வெடித்தும், இனிப்புகளை வழங்கியும் திமுகவினர் கொண்டாடினர். இதேபோல் தமிழகம் முழுவதும் திமுவினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.



▶ தேர்தலில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமாருக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் சான்றிதழை வழங்கினார்.

## நோட்டாவுக்கு கீழ் 44 வேட்பாளர்கள்

ஈரோடு இடைத்தேர்தலில் திமுக, நாதக உட்பட 46 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் திமுக 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில், நாதகவை தவிர மீதமுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர், சுயேட்சை வேட்பாளர்கள் என 44 பேரும் நோட்டாவை விட குறைவான வாக்குகளையே பெற்றுள்ளனர். நோட்டாவில் 6,109 வாக்குகள் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் போட்டியிட்ட அனைத்தும் வேட்பாளர்கள் இரட்டை இலக்கை தாண்டிதான் வாக்குகளை பெற்று உள்ளனர்.

## 2026 சட்டமன்ற தேர்தல் வெற்றிக்கான அச்சாரம் ■ வி.சி.சந்திரக்குமார்

திமுக வேட்பாளர் வி.சி.சந்திரக்குமார் நிருபர்களிடம் கூறுகையில், 'ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுகவின் வெற்றியை எங்களுடைய தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலினுக்கு சமர்பிக்கிறோம்.

எவ்வளவோ பேர் விதவிதமாக பிரசாரம் மேற்கொண்டாலும், திமுகவை தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு, அனைவரும் ஒன்று சேர்ந்து வந்தாலும், நாங்கள் களத்திலே சந்திப்போம் என மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார். அவரது கூற்றுப்படி தேர்தல் களத்தில் 46 வேட்பாளர்கள் நின்றாலும், இந்த தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்கு 75 சதவீதம் வாக்குகள் பெற்று திமுக வெற்றி பெற்றிருக்கிறது.

இந்த வெற்றி என்பது ஈரோடு கிழக்கு தொகுதியின் வெற்றி அல்ல. 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய திமுக வெற்றி பெறும் என்பதற்கு மிகப்பெரிய அச்சாரம். ஈரோடு பார்முலா என்பது மக்களை நேருக்கு நேர் சந்தித்து, மக்களின் பிரச்னைகளை கேட்டு, அதனை நிவர்த்தி செய்வதற்காக பணிகளை மேற்கொண்டு, அப்பிரச்னையை குறிப்பெடுத்து, அதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறி வந்திருப்பதே ஆகும். இதுவரை பார்த்திராத எம்எல்ஏவாக நான் செயல்படுவேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## 2023ல் நடந்த இடைத்தேர்தலைவிட 25,000 வாக்குகள் கூடுதலாக பெற்று திமுக வெற்றி

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி எம்எல்ஏவாக இருந்த திருமகன் ஈவெரா கடந்த 2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் தேதி உயிரிழந்தார். இதையடுத்து இத்தொகுதிக்கு கடந்த 2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் தேதி இடைத்தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளராக மறைந்த திருமகன் ஈவெராவின் தந்தை ஈவிகேஎஸ் இளங்கோவன் போட்டியிட்டு, 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். கடந்த இடைத்தேர்தலில் அதிமுக, நாதக, தேமுக உட்பட 77 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தற்போது நடந்த இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் சந்திரகுமார் கடந்த 2023ம் ஆண்டு இடைத்தேரதலில் ஈவிகேஎஸ் இளங்கோவன் பெற்ற வாக்கு வித்தியாசத்தைவிட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அதாவது 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் சந்திரகுமார் வெற்றி பெற்றுள்ளார்.

## 45 வேட்பாளர்கள் டெபாசிட் காலி

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார், நாதக வேட்பாளராக சீதாலட்சுமி மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிட்டனர். இதில் திமுக வேட்பாளர் 1,15,709 வாக்குகள் பெற்று, 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதற்கு அடுத்தபடியாக நாதக வேட்பாளர் சீதாலட்சுமி 24,151 வாக்குகளை பெற்றார். 3வது இடத்தில் நோட்டாவுக்கு 6,109 வாக்குகளும் பதிவானது. மொத்தம் பதிவான வாக்குகளில் ஒரு வேட்பாளர் 6ல் ஒரு பங்கு வாக்குகளை பெற்றால் மட்டுமே டெபாசிட் தொகையை திரும்ப பெற முடியும். அந்த வகையில் நாதக வேட்பாளர் சீதாலட்சுமி உட்பட அவரை எதிர்த்து போட்டியிட்ட 45 பேரும் 6ல் ஒரு பங்கு வாக்குகளை பெறாததால், 45 வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர்.

DINAMANI
Dated: 09.02.2025

# வாக்கு வித்தியாசத்தில் வரலாறு படைத்த வி.சி.சந்திரகுமார்

ஈரோடு, பிப். 8: ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தல்களை ஒப்பிடுகையில், இந்த தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று புதிய வரலாறு படைத்துள்ளார்.

ஈரோடு கிழக்கு சட்டப் பேரவைத் தொகுதி 2011- ஆம் ஆண்டு உருவானது. அப்போதிலிருந்து ஈரோடு கிழக்கு தொகுதியில் 2011, 2016, 2021 பொதுத்தேர்தல்கள், 2023 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்றுள்ளன.

2011 தேர்தலில் தேமுதிக வி.சி.சந்திரகுமார் (இப்போதைய திமுக வேட்பாளர்) 10,644 வாக்குகள், 2016-இல் அதிமுக கே.எஸ். தென்னரசு 7,794 வாக்குகள், 2021-இல் காங்கிரஸ் இ.திருமகன் ஈவெரா 8,904 வாக்குகள், 2023- இல் காங்கிரஸ் ஈவிகேஎஸ்.இளங்கோவன் 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர். ஆனால், இந்தத் தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று புதிய வரலாறு படைத்துள்ளார்.

DINAMANI

Dated: 09.02.2025

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: திமுக அமோக வெற்றி

## நாம் தமிழர் வேட்பாளர் உள்பட அனைவரும் வைப்புத்தொகை இழப்பு

ஈரோடு, பிப். 8: ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் 91,558 வாக்குகள் வித் தியாசத்தில் வெற்றி பெற்றார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்பட அனைத்து வேட்பாளர்க ளும் வைப்புத்தொகையை இழந்த னர்.

ஈரோடு கிழக்கு தொகுதி உறுப் பினராக இருந்த ஈவிகேஎஸ்.இளங் கோவன் கடந்த டிசம்பர் 14-ஆம் தேதி உடல்நலக் குறைவால் காலமா னார். இதையடுத்து, இந்தத் தொகு திக்கு கடந்த புதன்கிழமை (பிப். 5) நடைபெற்ற இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகு மார், நாதக வேட்பாளராக மா.கி. சீதாலட்சுமி உள்ளிட்ட 46 பேர் போட்டியிட்டனர். அதிமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகள் தேர்தலைப் புறக்கணித்தன.

வாக்குப் பதிவுக்காக 237 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தத் தேர்தலில், மொத்தம் உள்ள 2 லட்சத்து 27,546 வாக்காளர்களில், 74,260 ஆண்கள், 80,376 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் 21 பேர் வாக்களித்தனர். இது தவிர பெறப் பட்ட 251 தபால் வாக்குகளில் 233 தபால் வாக்குகள் ஏற்றுக்கொள் ளப்பட்டன. இதன்படி மொத்தம் 1 லட்சத்து 54,890 பேர் (67.97 சதவி தம்) வாக்களித்தனர்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் மின் னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோடு அருகே உள்ள ஈரோடு அரசுப் பொறியியல் கல்லூ ரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பாது காப்பு அறையில் வைத்து பூட்டி 'சீல்' வைக்கப்பட்டது.

**தொடக்கத்தில் இருந்தே முன் னிலை:** வாக்குகள் எண்ணும் பணி ஈரோடு அரசுப் பொறியியல் கல் லூரியில் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கியது. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட் டன. மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த், தேர் தல் பொது பார்வையாளர் அஜய் குமார் குப்தா ஆகியோர் தலைமை யில் வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் வாக்குப் பெட்டி கள் திறக்கப்பட்டு வாக்கு எண் ணிக்கை நடைபெற்றது.

வாக்குகள் 20 சுற்றுகளாக எண் ணப்பட்டன. தொடக்கம் முதலே திமுக வேட்பாளர் முன்னிலையில் இருந்து வந்தார்.

20 சுற்றுகளின் முடிவில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் 1,15,709 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மா.கி.சீதாலட் சுமி 24,151 வாக்குகளைப் பெற் றார். வாக்கு வித்தியாசம் 91,558. நோட்டாவுக்கு 6,109 வாக்குகள் பதி வாகி இருந்தன.

**வைப்புத் தொகையை இழந்த நாதக:** பதிவாகும் வாக்குகளில் 6-இல் ஒருபங்கு வாக்குகளைப் பெற்றி ருந்தால் மட்டுமே வேட்பாளருக்கு வைப்புத்தொகை திரும்பக் கிடைக் கும். அந்த வகையில் ஈரோடு கிழக்கு தொகுதியில் 1 லட்சத்து 54,657 வாக் குகள் பதிவாகின. இதில் 6-இல் ஒரு பங்கான 25,777 வாக்குகள் பெற்றி ருந்தால் மட்டுமே வைப்புத்தொகை கிடைக்கும். நாதக வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமி 24,151 வாக்கு கள் மட்டுமே பெற்றார். இதனால் அவர் உள்ளிட்ட 45 வேட்பாளர்க ளும் வைப்புத்தொகையை இழந்த னர்.

**தபால் வாக்குகள் – திமுக முத லிடம்:** இந்தத் தேர்தலில் மொத்தம் 251 தபால் வாக்குகள் பதிவாயின. அதில் திமுக வேட்பாளருக்கு 197 வாக்குகள், நாதக வேட்பாளருக்கு 13, நோட்டாவுக்கு 8 வாக்குகள் கிடைத்தன. செல்லாதவை 18.

**மூன்றாம் இடத்தைப் பிடித்த நோட்டா:** 6,109 வாக்குகளைப் பெற்று நோட்டா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. சுயேச்சை வேட்பாளர்கள் அனைவ ரும் மூன்று இலக்க, இரண்டு இலக்க எண்ணிக்கையிலான வாக்குகளை மட்டுமே பெற்றனர்.

**அதிகாரிகளுடன் வேட்பாளர் கள் வாக்குவாதம்:** வாக்கு எண் ணிக்கை தொடங்கும் முன் திமுக, நாதக வேட்பாளர், அவர்களது முக வர்கள் உள்ளே வந்தபோதே பார பட்சம் காட்டப்பட்டதாகவும் முன் வரிசையில் நாதக முகவருக்கு இடம் ஒதுக்கவில்லை எனவும் வேட்பா ளர் சீதாலட்சுமி புகார் தெரிவித் தார்.

தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் தலையிட்டு, வேட்பாளர் கள், அவர்களது முதன்மை முகவர் களை முன்வரிசையிலும், சுயேச்சை வேட்பாளர்களின் முகவர்களை அடுத்த வரிசையிலும் அமரச் செய் ததால் சலசலப்பு அடங்கியது.

திமுக வேட்பாளர் சந்திரகுமாரு டன் வந்த திமுக தலைமை முகவர் குறிஞ்சி சிவகுமாரை போலீஸார் உள்ளே அனுமதிக்கவில்லை. அலு வலர்களிடம் முறையிட்ட சந்திரகு மார், அவரை வாக்கு எண்ணிக்கை அறைக்கு அழைத்துச்சென்றார்.

**9 ஆண்டுகளுக்குப் பிறகு மீண் டும் எம்எல்ஏ:** கடந்த 2011 சட்டப் பேரவைத்தேர்தலில் ஈரோடு கிழக்கு தொகுதியில் அதிமுக கூட்டணியில் தேமுதிக வேட்பாளராகப் போட்டி யிட்ட வி.சி.சந்திரகுமார் வெற்றி பெற்று எம்எல்ஏ ஆனார். 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இப்போது இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதன் மூலம் 9 ஆண்டு களுக்குப் பிறகு மீண்டும் எம்எல்ஏ-ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாருக்கு சான்றிதழை வழங்கும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த். உடன், மாவட்ட ஆட்சியர் ராஜகோபால் சுன்கரா, தேர்தல் பார்வையாளர் அஜய்குமார் குப்தா உள்ளிட்டோர்.